கிடையவே கிடையாது. கையாட்டினார். வேகமாக ஆட்டியதால் எனக்குக் கோபம் வந்தது.

I lost my temper.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கொஞ்சம் ஆத்திரமாக ஆரம்பமான விவாதம், திரு. ஹாண்டே அவர்களால் ஒரு அமைதி யான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டதற்காக நான் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட பெருந்தன்மையும், பரந்த மனப்பான்மையும் நிச்சயமாக வளரவேண்டுமென்று விரும்புகிறோம். ஒன்றை மாத்திரம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த நேரத்தில் கூட சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள், திடீரென்று அண்ணா அவர்கள் எழுவார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே கையைக் காட்டுவார்கள். அப்படியே அண்ணா அவர்கள் உட்கார்ந்து விடுவார்கள். சில நேரங்களில் மாறி மாறி இரண்டு பேரும் பேசிக் கொண்டிருக்கும்போது சபாநாயகர் கிருஷ்ணராவ் அவர்கள் 'நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி' என்று சொன்னவுடன் அண்ணா அவர்கள் உட்கார்ந்து விடுவார்கள். இன்றைக்கு யாராவது ஒருவர் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இன்னொருவர் எழுந்து ஏதோ சொல்ல விரும்புவதைக் கவனிக்கின்ற நேரத்தில் கையைக் காட்டி ஞல் உட்கார்ந்து விடுவது உண்டு. பேசிக் கொண்டிருக்கும் போது நடுவில் எழுந்தால் அந்த வாக்கியத்தை முடிக்க முடியாத நிலையில் 'கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்லுவதும் சகஜமாக இருக்கிறது. 'முடித்து விடுகிறேன்' என்று நான்கூடச் சொல்லுவது உண்டு. திரு. கண்ணப்பன் அவர்கள் 'முடித்து விடுகிறேன்' என்று இடையில் வார்த்தைகளைப் போட்டால் இடையில் அந்த வாக்கியம் முறிந்துவிடும் என்ற காரணத்தால் கையைக் காட்டியிருக்கலாம். திரு. ஹாண்டே அவர்கள் வருத்தம் தெரிவித்ததற்காக மகிழ்ச்சி. இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு எல்லோரும் உண்டியலுக்குப் போகலாம்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1973)—தொடர்ச்சி.